**<u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>**

| | | |
|---|---|---|
| **OS.No. 82 /2013** | **Date : 10.06.2025** | **DW 1** (3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி) |
| Name: தங்கமணி | த/பெ. ரங்கநாதன் | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1, 2 பிரதிவாதிகள் எனக்கு உறவினர்களா என்றால் ஆமாம். எனது தந்தையான 3 ஆம் பிரதிவாதி ரங்கநாதன் இறந்து 7 ஆண்டுகள் ஆகிறது. 4 ஆம் பிரதிவாதி ராஜகுமாரி எனது அம்மா ஆவார். 6 ஆம் பிரதிவாதி மைதிலி என்னுடைய தங்கை ஆவார். இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் விஸ்தீரணம் 17872 சதுர அடி நிலம் ஆகும். அதன் மொத்த விஸ்தீரணம் 68 செண்ட் ஆகும். அதில் 25 செண்ட்டை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு இலவசமாக நான் கிரயம் செய்து கொடுத்தேன். மேலும 2 செண்ட் நிலத்தை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுவதற்காக பஞ்சாயத்திற்கு இலவசமாக எழுதி கொடுத்தேன். மீதமுள்ள இடம் தான் மேற்படி 17872 சதுர அடி நிலம் ஆகும். மேற்படி நிலம் வீரக்கல்புதூர் கிராமத்தில் சர்வே எண். 112/1 யில் அமைந்துள்ளது. மேற்படி நிலம் எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் என் தந்தை எனக்கு 10.08.2001 யில் தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தது ஆகும். எனது தந்தை Chemplast சன்மார் நிறுவனத்தில் வீட்டு வசதி சங்கத்தில் தலைவராக இருந்தார். சங்க உறுப்பினர்கள் என் அப்பா பெயரில் உள்ள சொத்தை அபகரிக்க வேண்டி சில பிரச்சினைகள் செய்து வந்தனர். அந்த சங்கதியை 4 ஆம் பிரதிவாதியான என் அம்மா 1 ஆம் பிரதிவாதியிடம் சொன்னார். அதற்கு 1 ஆம் பிரதிவாதி நேரில் வந்து பிரச்சினையை பேசி முடித்துக்கொள்ளலாம் என்று கூறினார். 1 ஆம் பிரதிவாதி பிரச்சினையை முடித்துக் கொடுப்பதாக சொன்னாரா என்றால் ஆமாம். அதற்கு 1 ஆம் பிரதிவாதி 6 லட்ச ரூபாய் தொகை கேட்டார். 2 லட்சம் ரூபாய் 1 ஆம் பிரதிவாதியிடம் என் தகப்பனரான 3 ஆம் பிரதிவாதி கொடுத்தார். மேற்படி சங்கதிகள் எனக்கு நேரிடையாக தெரியுமா என்றால் தெரியும். பிரச்சினை உள்ள இடத்தை தான் விற்பனை செய்து கொடுப்பதாக 1 ஆம் பிரதிவாதி கூறினாரா என்றால் ஆமாம். அதற்கு நாங்கள் ஒத்துக்கொண்டோமா என்றால் ஆமாம். அதே போல் 1 ஆம் பிரதிவாதி 6 இடங்களை விற்பனை செய்து கொடுத்தாரா என்றால் ஆமாம். 1 ஆம் பிரதிவாதி மேற்படி வீட்டு வசதி சங்கத்தில் உறுப்பினராக இருந்தாரா என்றால் இல்லை. 1 ஆம் பிரதிவாதி மேலே சொன்னவாறு 6 இடங்களை விற்பனை செய்து கொடுத்த காரணத்தினால் அவர் பெயருக்கு 12.05.2010 ந்தேதி ஒரு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்தோமா என்றால் இல்லை. அவருக்கு தரவேண்டிய 4 லட்ச ரூபாய் பணத்திற்காக செக்யூரிட்டிக்காக மேற்படி தேதியில் ஒரு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டது. 1 ஆம் பிரதிவாதிக்கு தரவேண்டிய ரூ.4 லட்சம் பணத்திற்காக

செக்யூரிட்டிக்காக தான் மேற்படி ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டதாக எதிர் வழக்குரையிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி நிலத்தை விற்பனை செய்து கொடுப்பதற்காக தான் 1ஆம் பிரதிவாதி பெயரில் பொது அதிகார ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகள் 3.6.2012 ந்தேதியில் வாதிக்கு ஒரு கிரய ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுத்துள்ளனர் என்றால் அந்த கிரய ஒப்பந்த பத்திரம் மோசடியாக தயார் செய்யப்பட்டது ஆகும். மேற்படி கிரய ஒப்பந்த பத்திரத்தின் அடிப்படையில் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி 1ஆம் பிரதிவாதியின் கையாள் ஆவார். அவரை பயன்படுத்தி இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரய ஒப்பந்த பத்திரம் மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான மேற்படி கிரய ஒப்பந்த பத்திரம் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்று குறிப்பிட்டு 1ஆம் பிரதிவாதி பெயரிலோ அல்லது வாதி பெயரிலோ காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அவ்வாறாக புகார் கொடுக்காததற்கு காரணம் என்னவென்றால் 1ஆம் பிரதிவாதி என் அப்பாவிற்கு சில நில பிரச்சினைகளை முடித்துக்கொடுத்தவர் என்பதாலும் என் தாயாருக்கு நெருங்கிய உறவினர் என்பதாலும் புகார் கொடுக்கவில்லை. 1, 2 பிரதிவாதிகள் வாதிக்கு எழுதி கொடுத்த கிரய ஒப்பந்த பத்திரம் சட்டப்படியானது என்றால் சரியல்ல.

**(வாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)**

ஒம்/– தங்கமணி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–A.சண்முகப்பிரியா,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.